**தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும்

நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5. ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவு பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1. நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 2021/03 இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 26 திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிக்காட்டி | | |
| (i.) 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றின் (ஏசீஏ-எப்) ''திறைச்சேரிக்கு மாற்றம்'' காண்பிக்கும் பெறுமதியில் ஆண்டினுள் மற்றும் ஆண்டு | 2020 ஆம் ஆண்டின் காசு பாய்ச்சல் கூற்றில் பணத்தின் தேறிய மாற்றங்கள் குறிப்பிடும் போது எழுத்தர் பிழை காரணமாக ரூபா 54,000 ஆன சரியான | 2020 ஆம் ஆண்டிற்கு தொடர்புடையதாக மீண்டும் சீராக்கப்படும் கூற்றில் திறைச்சேரிக்கு மேற்கொண்ட மாற்றீடு |

| | | |
|---|---|---|
| இறுதியில் திறைச்சேரிக்கு மேற்கொள்ளப்படுகின்ற மாற்றீடுகள் உள்ளடக்கப்படல் வேண்டும். எனினும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றினுள் 2021 ஆம் ஆண்டில் திறைச்சேரிக்கு மாற்றீடு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டிற்கு தொடர்புடையதாக மீண்டும் சீராககப்படும் கூற்றில் திறைச்சேரிக்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றீடு ரூபா 4,169,656 உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிற்கு பதிலாக மேலதிகமாக திறைச்சேரிக்கு தீர்க்கப்பட்ட ரூபா 4,169,656 ஆன தொகையும் குறிப்பிடப்பட்டிருந்தது. | ரூபா 4,169,656 உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ii.) அரச கணக்குகள் வழிக்காட்டியின் 7.2 மற்றும் 7.5 பந்தி பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு தொடர்படையதாக கடந்த ஆண்டில் ஒப்பீட்டு மதிப்புகள் மீள சீராக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் வழிக்காட்டி 2021/03 மற்றும் 2021.11.26 திகதிய வழிக்காட்டியின் 7.2 மற்றும் 7.5 இன் கீழ் காண்பிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான வழிக்காட்டியின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக சிறைச்சாலைகள் திணைக்களம் தயாரித்த நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ-எப், அதாவது நிதி செயலாற்றல் கூற்று தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்கின்றேன். | கடந்த ஆண்டிற்குரிய ஒப்பீட்டு மதிப்புக்களிலான மீள் சீராக்கம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (iii.) அரச கணக்குகள் வழிக்காட்டியின் 7.9 பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் மாதரிரியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் பிரகாரம் காலப்பகுதியினுள் திறைச்சேரிக்கு மாற்றப்பட்ட பணம், காலப்பகுதியின் இறுதியில் பண மீதிக்கு உள்ளடக்கப்படாத வண்ணம் மீளாய்வாண்டிற்காக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த ஆண்டில் மீண்டும் சீராக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றினுள் திறைச்சேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி ரூபா 4,169,656 பெறுமதியொன்று இறுதி மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் காசு பாய்ச்சல் கூற்றில் பணத்தின் தேறிய மாற்றங்கள் குறிப்பிடும் போது எழுத்தர் பிழை காரணமாக ரூபா 54,000 ஆன சரியான குறிப்பிற்கு பதிலாக மேலதிகமாக திறைச்சேரிக்கு தீர்க்கப்பட்ட ரூபா 4,169,656 ஆன தொகையும் குறிப்பிடப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டிற்கு தொடர்புடையதாக மீண்டும் சீராக்கப்படும் கூற்றில் திறைச்சேரிக்கு மேற்கொண்ட கட்டுநிதி ரூபா 4,169,656 ஆன பெறுமதியொன்று இறுதி மீதிக்கு உள்ளடக்கப்படாத வண்ணம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6.2. கணக்கீட்டு குறைப்பாடுகள்

--------------------------------

### (அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கிடும் போது பின்வரும் குறைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i.) மீளாய்வாண்டின் திறைச்சேரி அச்சு அறிக்கை (எஸ்ஏ82) பிரகாரம் ஆரம்ப மீதியான ரூபா 9,232,484,175 இற்கு ரூபா 320,088,484 சீராக்கப்பட்டு புதிய ஆரம்ப மீதியாக ரூபா 9,552,572,659 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 9,033,979,239 ஆகும். இதன் பிரகாரம் கடந்த ஆண்டின் மற்றும் இந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில், நிதி அல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதியில் ரூபா 518,593,420 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த வேறுபாடு நிதி நிலைமைக் கூற்றினுள் கடந்த ஆண்டின் ஒப்பீட்டு பெறுமதிகளின் மீண்டும் சீராக்கல் என மேற்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டின் பெறுமதிகள் ஒப்பீட்டளவில் சீராக்கப்படுவதற்காக உரிய மாதிரியொன்று காணப்படாமையினால் மீளாய்வாண்டில் திறைச்சேரி SA-82 அச்சு அறிக்கை நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென கணக்காய்விற்கு தெரிவித்துக் கொள்கின்றேன். | இந்த வேறுபாடு நிதி நிலைமை பற்றிய கூற்றினுள் கடந்த ஆண்டின் ஒப்பீட்டு பெறுமதி மீண்டும் சீராக்கம் என மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii.) திறைச்சேரி எஸ்ஏ 82 மாதிரியின் பிரகாரம் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ஆண்டு இறுதி பெறுமதி ரூபா 420,955,588 ஆகவிருப்பினும், திணைக்களத்தின் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக பெறுமதி ரூபா 420,321,788 ஆகும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அல்லாச் சொத்துக்களின் பெறுமதி திறைச்சேரி எஸ்ஏ 82 மாதிரியின் மற்றும் திணைக்கள சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் ரூபா 633,800 ஆன | இந்த வேறுபாட்டிற்கு காரணமாவது திணைக்களத்தின் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சிகாஸ் வலை இடைமுகம் ஊடாக திறைச்சேரிக்கு அறிக்கையிடப்பட்ட போதிலும் அப் பெறுமதிகள் **SA**-82 மாதிரியினுள் சீராக்கம் செய்யப்படாமையாகும். இது தொடர்பாக திறைச்சேரிக்கு தெரிவிக்கப்பட்டு குறித்த | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அல்லாச் சொத்துக்களின் பெறுமதி திறைச்சேரி எஸ்ஏ82 மாதிரிக்கு மற்றும் திணைக்கள சிகாஸ் நிகழ்ச்சிக்கு சமனாக காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென கணக்காய்விற்கு தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (iii.) | 346 ஏக்கர் 89.6 பர்ச் காணிகளின் உரித்து சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற போதிலும் பெறுமதி மதிப்பிடாமையினால் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு சொந்தமாக 346 ஏக்கர் 89.6 பர்ச் ஆன காணிகளின் பெறுமதி மதிப்பிடுவதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு குறித்த ஆவணங்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையில் குறித்த மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெறாமையினால் கணக்கிடப்படவில்லையென கணக்காயவிற்கு தெரிவித்துக் கொள்கின்றேன். | சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு உரித்துடைய காணிகளின் பெறுமதி மதிப்பிட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (iv.) | திணைக்களத்தின் பெயரிற்கு உரித்து கையகப்படுத்திக் கொள்ளப்படாத ரூபா 347,875,000 ஆன பெறுமதியுடைய காணி கணக்கிடப்பட்டிருந்தது. அப் பெறுமதி கணக்கிடப்பட்டமை திணைக்களம் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் பெயருக்கு உரித்து கையகப்படுத்திக் கொள்ளப்படாத ரூபா 347,875,000 ஆன பெறுமதியுடைய காணி கணக்கிடப்பட்டுள்ளமை கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பெறுமதி திணைக்களத்தின் புத்தகங்களில் கணக்கிடப்படவில்லை என கணக்காய்விற்கு தெரிவித்துக் கொள்கின்றேன். | திணைக்களத்தின் பெயருக்கு உரித்து கையகப்படுத்தாத காணி கணக்கிடுவதற்கு முன்னர் உரித்து கையகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். |
| (v.) | 392 ஏக்கர் 132.8 பர்ச் ஆன காணியின் உரித்து கையகப்படுத்தல், பெறுமதி மதிப்பிடல் மற்றும் கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டிராத போதிலும் இந்த காணிகள் சிறைச்சாலைகள், சிறைக்கூடம், திறந்தவெளி சிறை முகாமைகள், புனர்வாழ்வு மையங்கள் மற்றும் பண்ணைகளாக சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | 392 ஏக்கர் 132.8 பர்ச் ஆன காணியின் உரித்து சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், குறித்த கையகப்படுத்தலின் பின்னர் மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிப்பதுடன் தேவையின் அடிப்படையில் இந்த காணிகள் சிறைச்சாலை, | இக் காணிகளின் உரித்து கையகப்படுத்திக் கொண்டு பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சிறைக்கூடங்கள், திறந்தவெளி சிறை முகாம்கள், புனர்வாழ்வு மையங்கள் மற்றும் பண்ணைகளாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்றதென கணக்காய்விற்கு தெரிவிக்கின்றேன். | |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்ராமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 110 மாதிரியின் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு உரிய முறையில் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லலப்பட்டிருக்கவில்லை. | நி.பி 110 மாதிரியின் பிரகாரம் நட்டங்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுகின்றதுடன் அப் பதிவேட்டின் இற்றைப்படுத்தல்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிராதமையி னால் விரைவாக குறித்த பதிவேடு நாளது வரையாக்கப்படுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 110 பிரகாரம் பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டு உரிய முறையில் பேணிச் செல்லல் வேண்டும். |

**(இ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது வைப்பு கணக்குகள் 05 இன் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 84,696,013 ஆன வைப்பு தொடர்பாக நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்து நிறுவனங்களினதும் சிறைச்சாலை அத்தியகட்சர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6.3. கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் தொழிற்துறை மற்றும் விவசாய முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 49,563,423 ஆன கடன் பட்டோர் மீதியிலிருந்து ரூபா 26,376,961 ஆன மீதி உறுதி செய்துக் கொள்வதற்கு தேவையான சான்றுகள். | சமர்ப்பிக்கப்படாத சான்றுகளின் கீழ் கணக்காய்வு ஐயவினாவினுள் கடன் பட்டோர் மீதி பெறுமதியாக ரூபா 26,376,961.00 என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய இறுதி கணக்கின் கடன் பட்டோர் மீதி (2021.12.30 வரை) ரூபா 49,563,423.00 ஆக காணப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டிற்குரிய கடன் பட்டோர் மீதி ரூபா 19,725,349.81 என அறிக்கையிடப்பட்டிருந்தது. | கடன் பட்டோர் முழு மீதியும் உறுதி செய்துக் கொள்வதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

# 2. நிதி மீளாய்வு

## 2.1. வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சிறைச்சாலைகள் திணைக்களத்தினுள் நடத்திச் செல்லப்படுகின்ற சிற்றூண்டிச் சாலைகளிலிருந்து பெறப்பட வேண்டிய வாடகை வருமானம் அடையாளப்படுத்தி அவ் வருமானம் நிதி பிரமாணம் 83 பிரகாரம் அரச வருமான தலைப்பு இல 05 இன் வருமான குறியீட்டு இல 20-02-01-01 இன் கீழ் குத்தகை வாடகை வருமானமாக அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் மற்றும் கைதிகளின் பயிற்சி மற்றும் விளையாட்டு திறன்களை மேம்படுத்துவதற்கு அரசின் பாதீட்டில் போதுமான பணம் ஒதுக்கப்படாமையினால் அது வருமான சங்கங்களின் கணக்குகளுக்கு மிக நீண்ட காலம் தொடக்கம் செலவு வைக்கப்பட்டுள்ளது. | நிதி பிரகாரம் 83 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சிறைச்சாலைகள் மற்றும் சந்தேக நபர்களுக்கு பொருட்கள் மற்றும் உணவு விற்பனை ஊடாக இந்த சிற்றூண்டிச்சாலைகள் பாரிய வருமானமொன்று ஈட்டுகின்றது. தெரிவு அடிப்படையில் மேற்கொண்ட பரிசோதனையின் போது போகம்பரை சிறைச்சாலை 2021 ஆம் ஆண்டின் 08 மாதங்களினுள் சிறைச்சாலை மற்றும் சந்தேச நபர்களுக்கு பொருட்கள் விற்பனையில் மட்டும் ரூபா 10 மில்லியனிற்கு அதிகமான பணம் ஈட்டப்பட்டிருந்தது. எனினும் இந்த காலப்பகுதியினுள் சிற்றூண்டிச்சாலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 1,423,853 ஆன அளவும் நீர், மின்சாரத்திற்காக செலவு ஏற்கப்பட்டிருப்பினும் இந்த எந்தவொரு செலவும் சிற்றூண்டிச் சாலை பெறப்படுகின்ற வருமானத்திலிருந்து குறைக்கப்பட்டு அரசிற்கு மீள் நிரப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக இந்த சிற்றூண்டிச் சாலைக்கு தேவையான இன்வென்டரி பொருட்கள் மற்றும் கைதிகள் இருவரின் சேவையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2021 ஆகஸ்ட் தொடக்கம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிற்றூண்டிச் சாலைகளுக்கு 63 உத்தியோகத்தர்கள் பணிக்கப்பட்டிருந்ததுடன் அவ் உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவான ரூபா 16,495,141 ஆன தொகை ஒருங்கிணைந்த நிதியிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக சிற்றூண்டிச் சாலைகளில் சேவைக்காக 103 கைதிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | சிறைச்சாலை நிறுவனங்களின் பாதுகாப்பு காரணத்தினால் வெளி தரப்பினரிடமிருந்து சேவை பெற்றுக் கொள்ள முடியாது. சிறைச்சாலை உத்தியோகத்தர்களை இங்கு வேலையில் பணிப்பதற்கு நேர்ந்தது. | இந்த செலவினம் சிற்றூண்டிச் சாலைகளிலிருந்து பெறப்படுகின்ற தேறிய வருமானத்திலிருந்து குறைக்கப்பட்டு அரசிற்கு மீள்நிரப்பு செய்யப்படுதல் வேண்டும். |

## 2.2. செலவின முகாமைத்துவம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 10 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 417,200,000 ஆன மதிப்பிட்டு நிதியேற்பாட்டில் 30 சதவீதத்திற்கு மேற்பட்டதாக அதாவது ரூபா 126,447,218 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அவ் ஒவ்வொரு செலவின விடயங்களின் சேமிப்பும் 21 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | பின்வரும் காரணங்களினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.<br>• கட்டுநிதி பெறப்படாமை<br>• மேலதிக பாகங்களுக்கான விலை உயர்வடைதல், மேலதிக பாகங்களின் பற்றாக்குறை காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பழுதுபார்த்தல் மேற்கொண்டு நிறைவு செய்வதற்கு முடியாமை.<br>• முழுமையான நிதியேற்பாட்டிற்காக கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டு பொறுப்புகளுக்கு உட்பட்டிருத்தல்.<br>• ஆண்டு இறுதிக்குள் தீர்ப்பதற்காக பில்கள் சமர்ப்பிக்காமை.<br>• சிறைச்சாலைகளை இடமாற்றல் செய்யும் செயற்திட்டத்தின் நடவடிக்கை நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக மேற்கொண்டமை யினால் அதற்கான செலவினம் மேற்கொள்ளாமை.<br>• பெறப்பட்டிருந்த மூலதன கட்டுநிதிக்கு தொடர்புடைய பில்கள் | நிதி பிரகாரம் 50 பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுப்பனவு செய்வதற்கு போதுமானதாக காணப்படவில்லை.<br><br>• ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் பெறுகை நடவடிக்கைகள் நிறைவடையாமை<br><br>• கொவிட் 19 தொற்று நிலையின் காரணத்தினால் திட்டமிடப்பட்டவாறு குறித்த பாடநெறிகள் உரிய முறையில் மேற்கொள்வதற்கு முடியாமை.<br><br>• சந்தை விலை அதிகமான ஏற்ற இறக்கங்களுக்கு உட்படல் காரணமாகியது. | |
| (ஆ) | 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம், 232-01-01-0-2104 ஆன செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஆரம்ப நிதியேற்பாடு ரூபா 22 மில்லியன் ஆவதுடன் குறைநிரப்பு நிதியேற்பாட்டின் ஊடாக மேலும் ரூபா 145 மில்லியன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் ரூபா 37.552 மில்லியன் நி.பி 66 இன் கீழ் மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை காரணத்தினால் குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு இலக்கமிடப்பட்ட பணிக்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு காரணங்களினால் இறுதியில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடு எதிர்பார்க்கப்பட்ட வண்ணம் பயன்படுத்துவதற்கு முடியாமையை அவதானித்த காரணத்தினால் ஆண்டினுள் நிதியேற்பாடு பற்றாக்குறையான செலவின விடயங்களுக்கு ரூபா 37.55 மில்லியன் நி.பி 66 இன் கீழ் மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதியேற்பாடானது இலக்கமிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தாமை தெடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதற்கு முடியுமாக காணப்படினும் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையை காண்பிக்கின்றேன். | குறை நிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடானது இலக்கமிடப்பட்ட பணிகளுக்காக செலவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 232-01-01-05-2104 செலவின விடயத்தின் கீழ் பாதீடு செய்யப்பட்ட ஆரம்ப நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக ரூபா 30.2 மில்லியன் நி.பி 66 ஏற்பாட்டின் கீழ் மாற்றப்பட்டிருப்பினும், நி.பி 66 இன் கீழ் மாற்றப்பட்ட நிதியேற்பாடு 100 சதவீதம் செலவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டு இறுதியில் திறைச்சேரியின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதி பெற்றுக் கொள்வதற்கு முடியாது போனமையினால் குறித்த நிதியேற்பாடு பயன்படுத்துவதற்கு முடியாது போனது. | நிதி பிரமாணம் 50 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 எல்லைகள் மீறுதல்

அரசின் முற்பண செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள், மிகைகள் மற்றும் அடையப்படாமை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் பீ கணக்கின் (232011) குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 135,000,00 ஆக காணப்பட்ட போதிலும் உள்ளவாறான பெறுவனவு எல்லை ரூபா 118,352,926 ஆகியமையினால் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 ஆம் திகதி தேசிய வரவு செலவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நீதி அமைச்சின் செயலாளரினை அழைத்த BD/AA/LR/01/2022 ஆம் இலக்க கடிதத்தின் ஊடாகஇந்த முற்பண கணக்கின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் திருத்துவதற்காக நிதி அமைச்சருக்கு பரிந்துரை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | ப/13/அமா.மண்.சந்தேஷ/2016 மற்றும் 2021.10.12 திகதிய கடிதத்தின் ஊடாக எல்லை திருத்தப்படுவதற்காக திறைச்சேரிக்கு கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் அக் கோரிக்கைக்கு பதிலாக முற்பண பீ கணக்கின் குறைந்த பெறுவனவு திருத்தத்திற்காக தேசிய வரவுச் செலவு திணைக்களத்தின் ஊடாக BD/AA/LR/01/2022 ஆம் இலக்க மற்றும் 2021.12.31 திகதிய கடிதத்தில் பின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையான ரூபா 105,000,000 என நிதிக் கூற்றில் எம்ஏ-5 மாதிரியின் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது. | முற்பண கணக்கின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் திருத்துவதற்காக முறையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டுமெனவும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிப்பதற்காக அனைத்து காலாண்டுகளிலும் ஒரு தடவை முகாமைத்துவ கூட்டம் நடத்தப்பட்டு முறையான நிதிக் கட்டுப்பாடொன்று உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அந் நடவடிக்கைகளுக்குரிய மீளாய்வு அறிக்கை பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் தெரிவிக்கின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் பெறுமதி (ரூ.) | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** மோட்டார் வாகனச் சட்டம் 25 (1) | - | செல்லுபடியாகும் வருமான அனுமதிப் பத்திரமொன்று இன்றி சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 91 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுப்படுத்தப்பட்டிருந்தமை. | குறித்த வாகனங்கள் திணைக்களத்தின் பெயருக்கு கையகப்படுத்திக் கொண்டதன் பின்னர் உரிய முறையில் வருமான அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொண்டு ஓட்டத்தில் ஈடுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமொறு சிறைச்சாலைகள் அத்தியகட்சகர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | செல்லு படியாகும் வருமானம் அனுமதி பத்திரம் பெற்றுக் கொண்டு வாகனங்கள் ஓட்டத்திற்கு ஈடுப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | | |
| (i.) நிதி பிரமாணம் 502(ஆ) | 26,376,961 | நீண்ட காலமாகவுள்ள பின்வரும் பெற வேண்டிய கடன் மீதிகள் விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

| | | |
|---|---|---|
| • சிறைச்சாலையினால் அரச துறைக்கு மேற்கொள்ளப் பட்ட விற்பனை களுக்காக பெற வேண்டிய ரூபா 50,009,035 ஆன மீதியில் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,640,307 மற்றும் 5-20 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 24,701,036 ஆன பெற வேண்டிய மீதிகள் காணப்பட்டது. | • இந்த நிலுவை பில்களில் அதிகளவானவை 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்டவையாகும். பழைய பில்கள் காணாமல் போனமையினர்ல சரியான புள்ளிவிபர பதிவேடுகள் பெற்றுக் கொள்வதற்கு முடியாது போயுள்ளது. 2018 ஆம் ஆண்டின் ரூபா 66,500.00 ஆன நிலுவை பில்கள் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் நிலுவை பில்கள் தீர்த்தல் விரைவாக மேற்கொள்வ-தற்கு தேவையான ஆலோசனைகள் நிறுவனங்க-ளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு-ள்ளது. | நிதி பிரமாணம் 502 (ஆ) பிரகாரம் பெற வேண்டிய மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| • தனியார் துறைக்கு மேற்கொண்ட விற்பனைக்காக பெற வேண்டிய ரூபா 35,618 ஆன மீதியில் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 19,034 மற்றும் | • தனியார் துறையிலிருந்து பெற வேண்டியுள்ள ரூபா 35,618,00 ஆன பணத்தொகை தொடர்பாக சரியான தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு | நிதி பிரமாணம் 502 (ஆ) பிரகாரம் பெற வேண்டிய மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 10-20 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 16,584 ஆன பெற வேண்டிய மீதியும் காணப்பட்டது. | முடியாதுள்ளது. | |
| (ii.) நிதி பிரமாணம் 751(5) | - | சிதைவு மற்றும் விரயத்திலிருந்து சேதம் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பொருட்களின் பாதுகாப்பிற்காக போதுமான ஏற்பாடுகள் எடுப்பதற்கு வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமையினால் சிறைச்சாலையில் 108 லீட்டர் வர்ணப்பூச்சு மற்றும் பல்லேகெலே திறந்தவெளி சிறை முகாமில் ஔடத களஞ்சியசாலையில் 03 விடயங்களுக்குரிய 2005 அலகுகளின் இருப்பு காலாவதியாகியிருந்தது. | சிதைவு மற்றும் விரயத்திலிருந்து சேதம் ஏற்படுதலை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறும் பொருட்களின் பாதுகாப்பிற்காக போதுமான ஏற்பாடுகள் எடுக்குமாறும் களஞ்சியசாலை காப்பாளருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 751 (5) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii.) நிதி பிரமாணம் 770(4) | - | 1-10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலிருந்து பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட 72 வாகனங்கள் தொடர்பாக கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை. | தற்போது கொழும்பு சிறைச்சாலைக்குரிய 14 வாகனங்கள் தொடர்பாக கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அதில் 05 வாகனங்கள் தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு மற்றும் பாடசாலைகளு- | நிதி பிரமாணம் 770 (4) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | க்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்-ளதுடன் எஞ்சிய அனைத்து வாகனங்களினதும் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.6 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 371 (2) பிரகாரம், பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் பணி நிறைவடைந்தவுடனே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நானாவித பணிகளுக்காக 25 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 240,795 ஆன முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய தினத்திலிருந்து 02 வாரங்கள் தொடக்கம் 07 மாதங்கள் வரையான காலம் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நிலைமையினால் மற்றும் உத்தியோகப்பூர்வ கடமைகளின் சிறுதாமதம் காரணத்தினால் முற்பணம் தீர்த்தலில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் குறித்த பணி நிறைவடைந்தவுடனே இடைக்கால கட்டுநிதி தீர்ப்பதற்கு ஆலோசனை கொடுக்கப்பட்டது. | நிதி பிரமாணம் 371 (2) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.7 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 வங்கி கணக்குகளின் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களை மிகைத்து வங்கியில் வைப்புச் செய்யப்படாத கூட்டுத்தொகை ரூபா 165,559 ஆன 37 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------

### 3.1. திட்டமிடல்

------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது ஆண்டினுள் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்கு தொடர்புடைய உள்ளவாரான செயற்பாடுகள் அடையாளப்படுத்தப்பட்டு கிரய மதிப்பீடு தயாரிகக்ப்பட்டு அதன் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்படாது பெயரளவு (Dummy) செயற்பாடுகளுக்காக நிதியேற்பாடு மதிப்பிடப்பட்டு செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஆண்டினுள் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் ஆண்டு இறுதியில் செயல் நடவடிக்கை திட்டம் திருத்தப்பட்டிருந்தது. இவ் வண்ணம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரித்தமையினால்<br><br>➢ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து பணிகளும் (பொருள், சேவை மற்றும் செயற்திட்டங்கள்) பூரணப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற முகாமைத்துவ கருவியாக செயல் நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்துவதற்கு முடியாமை.<br><br>➢ சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதி மிக்கதாக சரியான நேரத்தில் திட்டம் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை அடைவதற்கு இயலாமை. | சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் குறிப்பிட்ட பணி அடையாளப்படுத்தப்படாது பெயரளவில் நிதியேற்பாடு ஒதுக்கப்படுவது செலவின விடயம் 2001,2002,2003 இற்காகும். அதற்கு உரிய பணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அதற்குரிய மதிப்பீட்டினை அடிப்படையாக கொள்ளாது நிறுவனத்திற்கு தேவையான நிதியேற்பாடு அளவு மட்டும் அதற்காக தொடர்புப்படுத்திக் கொள்வது அதிகாரத்தினால் கடந்த ஆண்டுகளில் அனுபவங்களின் அடிப்படையில் நிறுவனத்திற்கு செலவிடப்படக் கூடுமென எதிர்பார்க்கப்பட்ட பணத்திற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்படுவதனாலாகும். | சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதி தன்மையுடன் சரியான நேரத்தில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை அடைவதற்கு முடியுமான வகையில் முகாமைத்துவ கருவியாக செயல்நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2. பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
